பேரறிஞர் அண்ணா அவர்களின் 116 ஆவது பிறந்த நாளை முன்னிட்டு கோவை தெற்கு மாவட்டம் மோப்பிரிபாளையம் பேரூர் கழகம் சார்பாக வாகராயம்பளையத்தில் புதிதாக அமைக்கப்பட்ட 75 அடி உயர பிரம்மாண்டக் கொடிக்கம்பத்தில் கழக இரு வண்ணக் கொடியினை கோவை தெற்கு மாவட்ட கழக செயலாளர் தளபதி முருகேசன் கொடியேற்றினார். தொடர்ந்து கழகத் தலைவர் – தமிழ்நாடு முதலமைச்சர் தளபதியார் அவர்களின் பொற்கரங்களால் கணியூர் ஊராட்சியில் திறந்து வைக்கப்பட்ட முத்தமிழ் அறிஞர் தமிழினத் தலைவர் கலைஞர் அவர்களின் முழு உருவ சிலை அமைந்துள்ள கலைஞர் திடலில் கோவை பாராளுமன்ற உறுப்பினர் கணபதி ப.ராஜ்குமார் முன்னிலையில் பேரறிஞர் அண்ணாவின் திருவுருவப் படத்துக்கு மலர் தூவி மரியாதை செலுத்தியும், முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் முழு உருவச் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தியும், பொது மக்களுக்கு இனிப்புகள் வழங்கியும் சிறப்பாக கொண்டாடப்பட்டது. நிகழ்வில் சூலூர் வடக்கு ஒன்றிய கழக செயலாளர் அன்பரசு, மோப்பரிபாளையம் பேரூர் கழக செயலாளர் சசிகுமார், சாமளாபுரம் பேரூர் கழக செயலாளர் வேலுச்சாமி, சாமளாபுரம் பேரூராட்சி மன்ற தலைவர் விநாயகா பழனிச்சாமி, பொதுக்குழு உறுப்பினர் ரகு துரைராஜ், கணியூர் ஊராட்சி மன்ற தலைவர் வேலுச்சாமி, கோவை தெற்கு மாவட்ட நெசவாளர் அணி அமைப்பாளர் வாகை பூபதி, விளையாட்டு மேம்பாட்டு அணி துணை அமைப்பாளர் சரவணப்பிரியன், மாவட்ட பிரதிநிதி கோபால்சாமி, கலங்கல் சிவக்குமார் மற்றும் ஒன்றிய கழக நிர்வாகிகள், பேரூர் கழக நிர்வாகிகள், பேரூராட்சி மன்ற உறுப்பினர்கள், கணியூர் ஊராட்சி மன்ற நிர்வாகிகள், உள்ளாட்சிப் பிரதிநிதிகள் உட்பட கழக உறுப்பினர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

திருச்சி தெற்கு மாவட்ட தி.மு.க.வின் சார்பாக கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்ற தாரக மந்திரத்தை அரசியல் உலகிற்கு எடுத்துக்காட்டிய அரசியல் ஆசான், தந்தை பெரியாரின் வரிசாகவும், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் அண்ணனாகவும் வாழ்ந்து மறைந்த அறிஞர் அண்ணா அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு 15.09.2024 அன்று திருச்சி தெற்கு மாவட்ட கழகச் செயலாளர் அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, மாநகரக் கழகச் செயலாளர் மு.மதிவாணன் முன்னிலையில் சிந்தாமணியில் உள்ள பேரறிஞர் அண்ணா அவர்களின் திருஉருவச் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். அதனைத் தொடர்ந்து கலைஞர் அறிவாலயத்தில் அமைந்துள்ள பேரறிஞர் அண்ணா மற்றும் கலைஞர் சிலைகளுக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார் அதனைத் தொடர்ந்து திருச்சி சென்னை தேசிய நெடுஞ்சாலையில் அமைந்துள்ள 70 அடி கொடிமரத்தில் கழக இருவர்ண கொடியை ஏற்றி அனைவருக்கும் இனிப்புகளை வழங்கினார். இந்த நிகழ்வில் தலைமை செயற்குழு உறுப்பினர்கள் சேகரன், சபியுல்லா, மாவட்ட கழக நிர்வாகிகள் கோவிந்தராஜ், மாநில அணி நிர்வாகிகள் கவிஞர்சல்மா, செந்தில், பகுதி கழகச் செயலாளர் மோகன், மாநில, மாவட்ட, மாநகர நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள், பொதுக்குழு உறுப்பினர்கள், பகுதி, வட்ட, கிளைக் கழகச் செயலாளர்கள், நிர்வாகிகள், அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், கழகத் தொண்டர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

ஒடுக்கப்பட்ட மக்களுக்கான

உரிமைக் குரல் எழுப்பியவர் எஸ்.எஸ்.இராமசாமி படையாட்சி!

முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளத்தில் பதிவு!

சென்னை, செப்.18 –

ஒடுக்கப்பட்ட மக்களுக்காக உரிமைக் குரல் எழுப்பியவர் முன்னாள் அமைச்சர் எஸ்.எஸ்.இராமசாமி படையாட்சியார் என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

விடுதலைப் போராட்ட வீரரும், முன்னாள் அமைச்சருமான எஸ்.எஸ். இராமசாமி படையாட்சியார் அவர்களின் 107-வது பிறந்தநாளையொட்டி முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு:-

நாட்டு விடுதலைக்காகவும், சமூக உரிமைகளுக்காகவும் பாடுபட்ட எஸ்.எஸ்.இராமசாமி படையாட்சியாரின் பிறந்தநாள் இன்று.

பேரறிஞர் அண்ணாவோடும் முத்தமிழறிஞர் கலைஞரோடும் நெருங்கிப் பழகியவர் அவர்.

அவரது வாழ்வைப் போற்றி கீண்டி, ஹால்டா சந்திப்பில் தலைவர் கலைஞர் அமைத்த சிலைக்கு மலர் வணக்கம் செலுத்தினோம்!

ஒடுக்கப்பட்ட மக்களுக்கான உரிமைக் குரல் எழுப்பிய எஸ்.எஸ். இராமசாமி படையாட்சியாரின் பணிகளை நினைவுகூர்ந்து போற்றுவோம்!

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பதிவிட்டுள்ளார்.

இசுலாமிய மக்களின் பாதுகாவலனாக – சகோதரனாக

என்றென்றும் நிற்கும் இயக்கம் தி.மு.கழக அரசு!

மீலாதுன் நபியையொட்டி முதல்வர் மு.க.ஸ்டாலின் வாழ்த்துச் செய்தி!

சென்னை, செப். 18-

மீலாதுன் நபியை ஒட்டி முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வாழ்த்துச் செய்தி வெளியிட்டுள்ளார். அதில் இசுலாமிய மக்களின் பாதுகாவலனாக- சகோதரனாக என்றும் நிற்கும் இயக்கமான தி.மு.க. அரசின் சார்பில் மீண்டும் வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்வதாகக் குறிப்பிட்டுள்ளார்.

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் மீலாதுன் நபி வாழ்த்துச் செய்தி வருமாறு:-

நபிகள் நாயகத்தின் பிறந்தநாளைச் சிறப்பாகக் கொண்டாடும் இசுலாமிய சகோதரர்கள் அனைவருக்கும் எனது இனிய மீலாதுன் நபி நல்வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மனிதர்களிடையேயான வேற்றுமைகளைக் களைந்தெறியவும், அடிமை வணிகம் உள்ளிட்ட சமூக அநீதிகளுக்கு எதிராகவும் அன்றே குரல் கொடுத்தவர் நபிகள் நாயகம் ஆவார். அவரது போதனைகள் அமைதியான, சமத்துவ உலகுக்கு வழிகாட்டும் நெறிமுறைகள் ஆகும்.

"உழைப்பவர்களின் கூலியை அவர்களது வியர்வை உலரும் முன்பே கொடுத்து விடுங்கள்" என எளியவர்களுக்காகப் பேசினார். "உங்களை நீங்களே பெருமைப்படுத்திக் கொள்ள வேண்டாம்" எனப் பணிவுடைமையை வலியுறுத்தினார். "கற்ற வண்ணம் நடப்பவரே உண்மையில் கற்றவர்" என வாழ்க்கைக்கான நெறிமுறையை வகுத்துக் காட்டினார். அதன்படியே வாழ்ந்தும் காட்டினார் நபிகள் நாயகம் அவர்கள். அவர் காட்டிய வழியில் வறியவர்க்கு உதவுவது, இயற்கைச் சீற்றம், பெருந்தொற்று உள்ளிட்ட நெருக்கடியான காலங்களில் தன்னலமற்று மக்களுக்காகச் சேவையாற்றுவது, பசித்தோருக்கு உணவளிப்பது என இசுலாமிய மக்கள் வாழ்ந்து சமூக நல்லிணக்கத்தைப் பேணி வருகின்றனர்.

அன்பையும், ஈகையையும் சிறந்த குணங்களாக முன்னிறுத்திய அன்னாரது பிறந்த நாளை இசுலாமிய மக்கள் ஏற்றத்துடன் கொண்டாடி மகிழ்ந்திட 1969ஆம் ஆண்டே அரசு விடுமுறை அளித்தது முத்தமிழறிஞர் கலைஞர் தலைமையிலான கழக அரசு. 2001இல் அன்றைய அ.தி.மு.க ஆட்சி இதனை ரத்து செய்த நிலையில், 2006 ஆம் ஆண்டு ஆட்சிக்கு வந்த தலைவர் கலைஞர் தலைமையிலான கழக அரசு மீலாதுன் நபியை மீண்டும் அரசு விடுமுறையாக அறிவித்தது.

அவரது வழிநடக்கும், நமது திராவிட மாடல் அரசும் இசுலாமிய மக்களின் கோரிக்கைகள் அனைத்தையும் அன்புடன் செவிமடுத்து நிறைவேற்றி வருகிறது. வக்ஃப் சட்டத் திருத்த மசோதா போன்றவற்றால் அவர்களின் உரிமைகளுக்கு பாதிப்பு ஏற்படும் போது நாடாளுமன்றத்திலும் மக்கள் மன்றத்திலும் உரக்கக் குரல் கொடுத்து உறுதியாக உடன் நிற்கிறது.

இசுலாமிய மக்களின் பாதுகாவலனாக, அவர்களது சகோதரனாக என்றும் நிற்கும் இயக்கமான திராவிட முன்னேற்றக் கழக அரசின் சார்பில் மீண்டும் எனது மீலாதுன் நபி வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

தமிழ்நாடு அரசு - நெடுஞ்சாலைத்துறை

நபார்டு மற்றும் கிராமச் சாலைகள் வட்டம், செங்கல்பட்டு

ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு

ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு எண்.14/ 2024-2025/ முவதொஅ / நாள். 16.09.2024

தமிழ்நாடு ஆளுநருக்காகவும் அவர்களின் சார்பாகவும் **கண்காணிப்புப் பொறியாளர்(நெ) நபார்டு மற்றும் கிராமச் சாலைகள், செங்கல்பட்டு வட்டம்,** அவர்களால் **ஊராட்சி ஒன்றிய மற்றும் ஊராட்சி சாலைகளை இதர மாவட்ட சாலைகளாக தரம் உயர்த்துதல் NABARD RIDF-XXX – 2024-2025** பணிகளின் கீழ் **செங்கல்பட்டு(நெ)** நபார்டு மற்றும் கிராமச் சாலைகள் கோட்டத்திற்கான மூன்று தனிப்பணிகளுக்கும் இணையவழியில் மட்டுமே சதவீத ஒப்பந்தப்புள்ளிகள் **14.10.2024, 15.00 மணி வரை** வரவேற்கப்படுகிறது.

பணிகளின் விவரம், தோராய மதிப்பு, முன்வைப்பு தொகை, ஒப்பந்தப்புள்ளி ஆவணங்கள் மற்றும் அனைத்து இதர விபரங்களை **https://tntenders.gov.in** என்ற அரசு இணையதளத்தில் **20.09.2024** முதல் தெரிந்துகொள்ளலாம். ஏதேனும் திருத்தங்கள் / மாறுதல்கள் இருப்பின் மேற்குறிப்பிட்ட அரசு இணையதளத்தில் மட்டுமே வெளியிடப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது.

கண்காணிப்புப் பொறியாளர்(நெ)
நபார்டு மற்றும் கிராமச் சாலைகள் வட்டம்,
செங்கல்பட்டு-1

செ.ம.தொ.இ. / 3737 / ஒப்பந்தப்புள்ளி / 2024

பெருநகர சென்னை மாநகராட்சி
இயந்திர பொறியியல் துறை

குறுகிய கால மின்னணு ஒப்ப அறிவிப்பு

கீழ்காணும் பணிகளை மேற்கொள்ள கண்காணிப்பு பொறியாளர் (இ) அவர்களால் குறுகிய கால மின்னணு ஒப்பம் கோரப்படுகிறது

M.E.D.C.No.M1 / 2075/ 2024
Hiring of Additional High Capacity Dewatering Pumps (80 - 100 HP) (6000 LPM) for Zone I to V for a period of Two Months between September - 24 to December - 24

பணியின் தோராய மதிப்பு : ரூ.1,70,62,395/-
முன் வைப்பு தொகை : பணியின் மதிப்பில் ஒரு சதவீதம்
ஒப்பம் சமர்ப்பிக்க இறுதி நாள் மற்றும் நேரம் : **25.09.2024 பிற்பகல் 3.00, மணி**
ஒப்ப திறப்பு நாள் மற்றும் நேரம் : **26.09.2024 பிற்பகல் 3.30 மணிக்கு**
மேலும் விவரங்களுக்கு : **https://tntenders.gov.in** இணையதளம் மூலம் தெரிந்து கொள்ளலாம்.

செ.ம.தொ.இ / 3750 / ஒப்பந்தப்புள்ளி / 2024 **கண்காணிப்பு பொறியாளர் (இ)**

கிருஷ்ணகிரியில் 30 ஆவது அகில இந்திய மாங்கனி கண்காட்சி!

அமைச்சர் அர. சக்கரபாணி தொடங்கி வைத்தார்! தே.மதியழகன் எம்.எல்.ஏ. பங்கேற்பு!

கிருஷ்ணகிரி, செப். 18 -

கிருஷ்ணகிரி ஆடவர் கலைக்கல்லூரியில் 30 வது அகில இந்திய மாங்கனி கண்காட்சியை, உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி, மாவட்ட ஆட்சித்தலைவர் கே.எம். சரயு, கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட செயலாளரும் சட்டமன்ற உறுப்பினருமான தே.மதியழகன்

கிருஷ்ணகிரி நாடாளுமன்ற உறுப்பினர் கே. கோபிநாத், சட்டமன்ற உறுப்பினர் டி.ராமச்சந்திரன் ஆகியோர் முன்னிலையில் 13.09.2024 துவக்கி வைத்து, 212 பயனாளிகளுக்கு ரூ.4 கோடியே 33 இலட்சத்து 2 ஆயிரத்து 967 மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை வழங்கினர்.

அனைத்து துறைகளின் சார்பில் அமைக்கப்பட்ட அரசின் திட்டங்கள் குறித்த அரங்குகளை பார்வையிட்டு, பல்வேறு துறைகள் சார்பில் 212 பயனாளிகளுக்கு ரூ.4 கோடியே 33 இலட்சத்து 2 ஆயிரத்து 967 மதிப்பிலான அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

தொடர்ந்து, கலை மற்றும் பண்பாட்டுத் துறை சார்பாக 30 கலைஞர்களுக்கு விருதுகளை வழங்கினார். தொடர்ந்து, பல்வேறு கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றதை பார்வையிட்டனர்.

தொடர்ந்து, உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு திட்டத்தின் சார்பாக 24 பயனாளிகளுக்கு ரூ.1 கோடியே 20 இலட்சத்து 54 ஆயிரம் மதிப்பில் கடன் உதவிகளும், வருவாய் துறை சார்பாக 28 பயனாளிகளுக்கு ரூ.14 இலட்சம் மதிப்பில் இலவச வீட்டுமனை பட்டா ஆணைகளும், மாவட்ட வழங்கல் துறை சார்பாக 50 பயனாளிகளுக்கு புதிய மின்னனு குடும்ப அட்டைகளும், வேளாண்மைத் துறை சார்பாக 24 பயனாளிகளுக்கு ரூ.3 இலட்சத்து 74 ஆயிரம் 950 மதிப்பில் வேளாண் இடுபொருட்களும், தமிழ்நாடு முதலமைச்சரின் விரிவான காப்பீடு திட்டத்தின் கீழ் 10 பயனாளிகளுக்கு ரூ.50 இலட்சம் மதிப்பில் காப்பீடு அட்டைகளும், ஊரக வளர்ச்சித் துறை சார்பாக கலைஞர் கனவு இல்லம் திட்டத்தின் கீழ் தலா ரூ.3.50 இலட்சம் மதிப்பில் 54 பயனாளிகளுக்கு ரூ.1 கோடியே 89 இலட்சம் மதிப்பில் வீடு கட்டுவதற்கான ஆணைகளும், முதலமைச்சரின் விபத்து நிவாரண நிதியின் கீழ் தலா 1 இலட்சம் வீதம் 5 பயனாளிகளுக்கு ரூ.5 இலட்சம் மதிப்பில் நிவாரண உதவி தொகையும், தோட்டக்கலைத்துறை சார்பாக 5 பயனாளிகளுக்கு ரூ.31 இலட்சத்து 63 ஆயிரம் 704 மதிப்பில் சிப்பம் கட்டும் அறை, மாடி தோட்ட தொகுப்பு, நுண்ணீர் பாசனம், பசுமைகுடில் அமைப்பதற்கான மானிய தொகையும், வேளாண் பொறியியல் துறை சார்பாக 8 பயனாளிகளுக்கு ரூ.13 இலட்சத்து 61 ஆயிரத்து 713 மதிப்பில் சோலார் பேனல், விவசாய இயந்திரம் பெறுவதற்கான மானிய தொகையும், மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை சார்பாக 5 பயனாளிகளுக்கு ரூ.30 ஆயிரத்து 600 மதிப்பில் தையல் இயந்திரங்களும், கூட்டுறவுத்துறை சார்பாக 5 பயனாளிகளுக்கு ரூ.5 இலட்சத்து 18 ஆயிரம் மதிப்பில் பயிர் கடன் உதவிகள் என மொத்தம் 212 பயனாளிகளுக்கு ரூ.4 கோடியே 33 இலட்சத்து 2 ஆயிரத்து 967 மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

தொடர்ந்து கலை மற்றும் பண்பாட்டுத் துறை சார்பாக தலா 6 கலைஞர்கள் வீதம் 30 கலைஞர்களுக்கு கலை முதுமணி, கலை நன்மணி, கலை சுடர் மணி, கலை வளர்மணி, கலை இளமணி ஆகிய விருதுகளை வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் தங்கதுரை, மாவட்ட வருவாய் அலுவலர் சாதனைக்குறள், ஊரக வளர்ச்சித்துறை கூடுதல் ஆட்சியர் வந்தனா கர்க்., இணை இயக்குநர் (தோட்டக்கலைத்துறை) மா.இந்திரா, வேளாண்மைத்துறை இணை இயக்குநர் பச்சையப்பன், மாவட்ட ஊராட்சிக்குழுத் தலைவர் மணி மேகலை நாகராஜ்,

கிருஷ்ணகிரி மாவட்ட அவை தலைவர் நாகராஜ், மாநில இளைஞரணி துணை செயலாளர் சீனிவாசன்,

மாநில விவசாய அணி துணை செயலாளர்கள் டேம். வெங்கடேசன், அரியப்பன், மாவட்ட ஊராட்சி குழு துணைத் தலைவர் ஷேக்.ரஷீத்,

மாவட்ட துணை செயலாளர்கள் கோவிந்தசாமி, சாவித்திரி கடலரசு மூர்த்தி, பொருளாளர் கதிரவன், தலைமை செயற்குழு உறுப்பினர் பரிதா நவாப், கிருபாகரன், செந்தில், பொதுக்குழு உறுப்பினர் அஸ்லாம், நாகராசன், நகர கழக செயலாளர் நவாப், ஒன்றிய செயலாளர்கள் கோவிந்தன், தனசேகரன், தேங்காய் சுப்பிரமணி, மகேந்திரன், அறிஞர், குணவசந்தரசு, ரஜினி செல்வம், பேரூர் கழக செயலாளர் பாபு, தம்பிதுரை, வேங்கடப்பன், பர்கூர் தொகுதி பொறுப்பாளர் அன்பரசன் உள்ளாட்சி பிரதிநிதிகள், விவசாய பெருமக்கள், அனைத்து துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

கோவை கூட்டத்தில் ஜி.எஸ்.டி. குளறுபடி குறித்துப் பேசிய தொழிலதிபரை அவமானப்படுத்திய

ஒன்றிய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமனைக் கண்டித்து ஆர்ப்பாட்டம்!

கோவை மாவட்ட தி.மு.க. – இந்தியா கூட்டணிக் கட்சிகள் பங்கேற்பு!

கோவை, செப் 18-

கோவை டாடாபாத் பவர் ஹவுஸ் அருகில், ஒன்றிய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமனை கண்டித்து மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நேற்று முன்தினம் (16.9.2024) நடைபெற்றது.

பின்னர் திமுக இந்திய கூட்டணிக் கட்சிகளின் மாநில, மாவட்டத் தலைவர்கள் கண்டன உரை நிகழ்த்தினார்கள்.

கோவை மாநகர் மாவட்ட திமுக செயலாளர் நா. கார்த்திக் தலைமையில் நடைபெற்ற, இக்கூட்டத்தில், வடக்கு மாவட்ட தி.மு.க. செயலாளர் தொ.அ. ரவி, தெற்கு மாவட்ட திமுக செயலாளர் தளபதி முருகேசன், மாநகர் மாவட்ட திமுக அவைத் தலைவர் கணபதி ராஜ்குமார் எம்பி., கோவை மாநகராட்சி மேயர் இரா.ரங்கநாயகி, இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் தேசிய செயலாளர் மயூரா எஸ். ஜெயகுமார், மாவட்ட திமுக இந்திய கூட்டணிக் கட்சிகளின் மாவட்ட தலைவர்கள், செயலாளர்கள் மதிமுக ஆடிட்டர் அர்ஜுன் ராஜ், கணபதி செல்வராஜ், ஆர்.ஆர்.மோகன்குமார்,, சி.பி.ஐ.எம். மாவட்டச்செயலாளர் சி.பத்மநாபன், குணசேகரன், சிவஞானம், சி.பி.ஐ. எம்.ஆறுமுகம் ex.எம்எல்ஏ., மாவட்ட செயலாளர் சிவசாமி, த.பெ.தி.க. பொதுச்செயலாளர் கு.இராமகிருட்டிணன், விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் குமணன், கொ.ம.தே.க.கட்சியின் விஜயகுமார், ஆதித் தமிழர் பேரவை ரவிகுமார், திராவிட தமிழர் கட்சி வெண்மணி, மாவட்ட திமுக துணைச் செயலாளர்கள் கோட்டை அப்பாஸ், கல்பனா செந்தில், அசோக் ஆறுக்குட்டி, மாவட்ட நிர்வாகிகள், திமுக தலைமை கழக நிர்வாகிகள் பி.நாச்சிமுத்து, அ.தமிழ்மறை, திமுக தலைமை செயற்குழு உறுப்பினர்கள் வே.பாலசுப்பிரமணியன்,

ஆனந்த குமார், ஏர்போர்ட் ராஜேந்திரன், டி.பி.சுப்பிரமணியன், துணை மேயர் இரா.வெற்றிச்செல்வன், திமுக இந்திய கூட்டணிக் கட்சிகளின் நகர, ஒன்றிய, பகுதி, வார்டு, பேரூராட்சி செயலாளர்கள், திமுக இந்திய கூட்டணிக் கட்சிகளின் அனைத்து உள்ளாட்சிப் பிரதிநிதிகள், திமுக இந்திய கூட்டணிக் கட்சிகளின் செயல்வீரர்கள், தொண்டர்கள் ஆயிரக்கணக்கானோர் கலந்து கொண்டனர்.

கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பாக மாவட்டச் செயலாளரும், பர்கூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினருமான தே.மதியழகன் தலைமையில் மாவட்ட கழக அலுவலகத்தில் பேரறிஞர் பெருந்தகை அறிஞர் அண்ணா அவர்களின் படத்திற்கு மாலை அணிவித்து, மலர் தூவி மரியாதை செலுத்தி, இனிப்புகள் வழங்கினார். இந்நிகழ்ச்சியில் மாநில விவசாய அணி துணை செயலாளர் டேம். வெங்கடேசன், மாவட்ட துணை செயலாளர்கள் கோவிந்தசாமி, சாவித்திரி கடலரசு மூர்த்தி, பொருளாளர் கதிரவன், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் பரிதா நவாப், கிருபாகரன், செந்தில் பொதுக்குழு உறுப்பினர்கள் அஸ்லாம், நாகராசன், சித்ரா சந்திரசேகர், கிருஷ்ணகிரி நகர கழக செயலாளர் நவாப், ஒன்றிய செயலாளர்கள் கோவிந்தன், தனசேகரன் உள்ளிட்ட கழகத்தினர் உள்ளாட்சி பிரதிநிதிகள், அணிகளின் அமைப்பாளர்கள் 500க்கும் மேற்பட்டோர் உடன் இருந்தனர்.

ஒன்றிய நிதியமைச்சர் நிர்மலா சீத்தாராமன் கோவையில் ஜி.எஸ்.டி. குளறுபடி குறித்துப் பேசிய தொழில் அதிபரை மிரட்டி மன்னிப்புக் கேட்க வைத்ததைக் கண்டித்து கோவையில் மாவட்டச் செயலாளர் நா.கார்த்திக் தலைமையில் அனைத்துக் கட்சியினர் நேற்று திரண்டு ஆர்ப்பாட்டம் நடத்திய காட்சி!